வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ఈళనాడు

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 31.03.2026 செவ்வாய்கிழமை இதழ் : 84 பக்கங்கள் : 08




### சட்டவிரோத மீன்பிடிக்கு எதிராக

## முல்லைத்தீவு மீனவர் நேற்று முதல் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம்!

முல்லைத்தீவு, மார்ச் 31

சட்டவிரோத கடற்றொழில்களை நிறுத்தக் கோரி, முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று முதல் தொடர் கவன யீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகத்திற்கு முன்பாக முல்லைத்தீவு மாவட்ட மீன வர்கள், போராட்டத்தை முன்னெடுத்து வருகின் றனர்.

இன்று கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர்,

07

## எரிபொருள் தட்டுப்பாட்டால் நாளாந்தம் 50 ஆயிரம் கிலோ மரக்கறிகள் அழிவு!

கொழும்பு, மார்ச் 31

எரிபொருள் தட்டுப்பாட்டினால் மொத்த வியாபா ரிகள் சந்தைக்கு வருகை தர முடியாதமையால் நாள்தோ றும் சுமார் 50 ஆயிரம் கிலோ கிராம் மரக்கறிகள் மற் றும் பழங்கள் பழுதடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மரக்கறி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் நிமல் ஹேவாவிதாரண இதனைத் தெரி வித்துள்ளார்.

07

### இன்று முதல் நாடளாவிய ரீதியில்

# அரசு மருத்துவ அதிகாரிகள் அடையாள வேலைநிறுத்தம்!

### உரிய தீர்வு கிடைக்காவிட்டால் போராட்டம் தொடரும்

கொழும்பு, மார்ச் 31

இன்று காலை முதல் நாடு முழு வதும் உள்ள அனைத்து அரசு மருத் துவமனைகளிலும் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க அரசு மருத்துவ அதி காரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

எந்தவொரு முன் விசாரணையு மின்றி, சட்டவிரோதமாகவும் அரசி யல் நோக்கங்களுக்காகவும் இடமாற் றங்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றம்சாட்டி, இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8:00 மணிக்கு ஆரம்பமாகி நாளை ஏப்ரல் முத லாம் திகதி காலை 8:00 மணிக்கு நிறைவடையவுள்ளது.

இந்த வேலைநிறுத்தம் காரண மாக அனைத்து அரசு மருத்துவம னைகளிலும் வெளிநோயாளர் பிரிவு சேவைகள் மற்றும் கிளினிக் சேவைகள் முற்றாக ஸ்தம்பிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் தூர இடங்களில் இருந்து சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடும்.

எனினும், பொதுமக்களின் நலன் கருதி அவசர சிகிச்சை பிரிவுகள், அவசர சத்திர சிகிச்சைகள் மற்றும் மகப்பேறு சேவைகள் போன்ற அத்தியாவசிய சேவைகள் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிடில், எதிர்வரும் நாள்களில் தொடர்ச்சியான தொழிற்சங்க

07

## நாளை முதல் அதிரடியாக உயர்கிறது மின் கட்டணம்!

### பெரும் இக்கட்டில் பாவனையாளர்கள்

கொழும்பு, மார்ச் 31

2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக் கான மின்சாரக் கட்டண த்தை அதிகரிப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு ஏகமனதாக தீர்மானி த்துள்ளது.

இதற்கமைய, மின்சா ரக் கட்டண திருத்தம் ஏப்ரல் மாதம் 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

இந்த ஆண்டின் இர ண்டாம் காலாண் டுக்கு அமைய, 13.56 வீத மின்சாரக்

07

## வெளிநாடுகளில் பதுங்கியிருந்த 30 குற்றவாளிகள் இலங்கைக்கு!



கொழும்பு, மார்ச் 31

வெளிநாடுகளில் மறைந்து ள்ள குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் களை நாட்டுக்கு கொண்டு வரும் திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் 30 பாரிய குற்றவாளிகளை நாட்டுக்கு அழைத்து வர முடிந்துள் ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி

07

## சிறீலங்கன் எயார்லைன்ஸ் தலைவர் பதவி விலகல்

கொழும்பு, மார்ச் 31

சிறிலங்கன் எயார்லை ன்ஸ் மற்றும் சிறிலங்கன் கேட்டரிங் ஆகிய நிறு வனங்களின் தலை வர் பதவியிலிருந்து சரத் கணேகொட

07

## தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை ஒகஸ்ட் 09 இல்!

கொழும்பு, மார்ச் 31

தேசிய பாடசாலைக ளில் தரம் 6 இற்கு மாண வர்களைச் சேர்ப்பதற்கும், வருமானம் குறைந்த மாண வர்களுக்கு மாதாந்த உத விப்பணம் வழங்கு வதற்குமாக தரம் 5

07

## டிராக்டரால் மோதி பொலிஸார் கொலை; இரண்டு பேர் கைது; சாரதி தலைமறைவு

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அதிகாரியை உழவு இயந் திரத்தால் மோதி கொலை செய்ததுடன், மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தருக்கு படுகாயம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

பிரதான சந்தேகநபர் தலைமறைவாக உள்ள நிலை யில், அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்ற னர்.

கொடிகாமம், கெற்பேலி பகுதியில்

07

## அம்புலன்ஸ், தாதியர்கள் இல்லாமல் இயங்கிய இளவாலை வைத்தியசாலை

### மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணையில் வெளிவந்த தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 31

இளவாலை பிரதேச வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத் தர்கள் எவரும் நியமிக் கப்படவில்லை எனவும், அம்புலன்ஸ் சாரதி நிய மிக்கப்படாதமையால், அம்புலன்ஸ் காரைநகர் வைத்தியசாலைக்கு கைய ளிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இளவாலை பிரதேச வைத்தியசாலை யில் மாணவனுக்கு சிகிச்சை

07

## அரச அலுவலகங்களில் 3 மணிக்கு பின் வளிச் சீராக்கி பயன்படுத்த கட்டுப்பாடு!

கொழும்பு, மார்ச் 31

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமை மற்றும் எரிபொருள் விநியோக மட்டுப்படுத்தல்கள் கார ணமாக அரசாங்க அலுவலகங்களின் வளப்பாவனை யைக் கட்டுப்படுத்தும் வகையில் பிற்பகல் 3 மணிக்குப் பின்னர் வளிச்சீராக்கிகள் பயன்படுத்துவதை நிறுத்து மாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர நாயகத் தினால் உடனடியாகச் செயற்படும் வகையில் நேற்று மாலை வெளியிடப்பட்ட சுற்றுநிருபத் தின் மூலம் இந்த அறிவித்தல்

07

## சட்டவிரோதமாக மீன்பிடி; 4 பேர் மன்னாரில் கைது!

மன்னார், மார்ச் 31

மன்னாரின் வங்காலை கடல் பகுதியில் கடற்படை மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, சட்டவிரோதமாக இரவு நேர சுழியோடி நடவடிக்கை ளில் ஈடுபட்ட நான்கு சந்தேகநபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த நடவடிக்கையில் 349 கடல் அட்டைகளுடன் சுழியோடி உபகரணங்களும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின்போது கைது

07

## யூரியா உர விநியோகத்தில் கட்டுப்பாடு: நெற்செய்கைக்கு மட்டும் முன்னுரிமை!

கொழும்பு, மார்ச் 31

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் நெருக்கடி நிலையினால் நாட்டுக்குள் யூரியா உரத்தின் கையிருப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனால், நடப்பு சிறுபோக நெற்செய்கைக்கு மாத்திரம் யூரியா உரத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் சூழலைக் கருத்திற்கொண்டு, 2026ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கை நடவ டிக்கைகளுக்காக மாத்திரம் கலக்கப்படாத

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும் அபாயம்

## அமெரிக்க எரிசக்தித்துறை எச்சரிக்கை

வாஷிங்டன், மார்ச் 31

உலகளாவிய ரீதியில் எரிபொருள் மற்றும் நுகர்வோர் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த, ஹோர்முஸ் நீரிணையை உடனடியாகத் திறப்பதே "ஒரே தீர்வு" என அமெரிக்க எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுத் துறையின் உயர்மட்ட அமைப்பான அமெரிக்க பெற்றோலிய நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க பெற்றோலிய நிறுவனத்தின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மைக் சோம்மர்ஸ், இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் "இந்த வாரத்திற்குள் இலக்கு வைக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் ஹோர்முஸ் நீரிணையைத் திறக்க வேண்டும். காலதாமதம் ஏற்படும் ஒவ்வொரு நிமிடமும் எரிபொருள் விலை மேலும் அதிகரித்துக்கொண்டே செல்லும்" என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் ஏமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் போருக்குள் நுழைந்துள்ளமை குறித்து மைக் சோம்மர்ஸ் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

மேலும் "ஹூதிகள் செங்கடல் வழியாகச் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல்களைத் தொடுத்தால், அது ஒட்டுமொத்த உலகையும் ஒரு மிகப் பெரிய எரிசக்தி நெருக்கடிக்குள் தள்ளிவிடும். இதுவே இந்த வாரத்தின் மிக முக்கிய கவலையாக உள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக அளவில் எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்தில் பெரும் பகுதியைத் தீர்மானிக்கும் ஹோர்முஸ் நீரிணை முடக்கப்பட்டுள்ளதால், அமெடிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் பணவீக்கம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# வரணி இயற்றாலைப் பகுதியில் வயோதிப பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

வரணி இயற்றாலைப் பகுதியில் வசித்து வந்த வயோதிபப் பெண் ஒருவர் கடந்த 3 நாள்களுக்கு முன்னர் காணாமல்போயிருந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை எரியுண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மகாதேவன் சிவஞானம் என்ற 62 வயதுடைய பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மகன் புலம்பெயர் நாட்டில் வசித்து வரும் நிலையில் குறித்த பெண் தனது வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த 25ஆம் திகதி வீட்டிலிருந்து வெளியேறிய அவர் மீண்டும் வீடு திரும்பாத நிலையில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் ஊர் மக்களும் தேடுதலில் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை மந்துவில் வன்னியாசி மதகு பகுதியிலுள்ள சிறிய காட்டிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த பெண் தனது வீட்டிலிருந்து இறுதியாக வெளியேறிய சி.சி.ரி.வி. காணொளி வெளியாகியுள்ள நிலையில் சம்பவம் தொடர்பான உண்மைத்தன்மையை அறிய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# குமார ஜயக்கொடி பதவி விலக கோரி கையெழுத்துப் போராட்டம் ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 31

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி உடனடியாகப் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி, மகரகமையில் மக்கள் கையெழுத்துப் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

நிலக்கரி இறக்குமதியின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் மற்றும் அமைச்சின் செயலர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் செயற்திறனற்ற போக்கு ஆகியவற்றை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மின்சாரப் பாவனையாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அச்சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க, நிலக்கரி இறக்குமதியில் அமைச்சருக்கு எதிராக எழுந்துள்ள பாரிய ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்துச் சுட்டிக்காட்டினார்.

அமைச்சரையும் அமைச்சின் செயலாளரையும் உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்பதே இந்தப் போராட்டத்தின் பிரதான கோரிக்கையாகும். மகரகமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கையெழுத்துப் போராட்டம், அடுத்த கட்டமாக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகவும் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# மின் வெட்டைத் தவிர்க்கும் நோக்கில் மின்சக்தி சேமிப்புத் திட்டம் அறிமுகம்

கொழும்பு, மார்ச் 31

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் மற்றும் கால நிலையால் ஏற்படக்கூடிய மின்சாரத் தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் நோக்கில், "சுரகிமு லங்கா" எனும் தேசிய மின்சக்தி சேமிப்புத் திட்டத்தை அரசாங்கம் உத்தியோகப்பூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

நேற்று முன் தினம் முதல் அடுத்த ஐந்து மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டம், பொதுமக்களிடையே மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பசிபிக் பெருங்கடலில் ஏற்படும் வெப்பநிலை மாற்றங்களால் உருவாகும் எல்-நினோ கால நிலை காரணமாக, இலங்கையில் மழைவீழ்ச்சி குறைந்து நீண்ட வறட்சி ஏற்பட வாய்ப்புள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதனால் நீர்மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு, அதிக செலவு மிக்க அனல்மின் உற்பத்தியைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதால், இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையிலான மின்சாரப் பயன்பாடு அதிகமுள்ள நேரங்களில், மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறும், அதிக மின்சாரம் தேவைப்படும் வேலைகளைப் பகல் நேரத்திற்கு மாற்றிக்கொள்ளுமாறும் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் எவ்விதமான மின்வெட்டோ அல்லது கட்டுப்பாடுகளோ விதிக்கப்படமாட்டாது என்றும், பொதுமக்களின் தன்னிச்சையான பங்களிப்புடனேயே இது முன்னெடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கையில் தாய்மார்களுக்கு கிடைக்கும் குறைந்த சம்பளம்!

கொழும்பு, மார்ச் 31

இலங்கையில் குழந்தையுள்ள தாய்மார்கள் குறைவான சம்பளத்தைப் பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு மற்றும் உலக வங்கியின் 2026 ஆம் ஆண்டு அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் தனியார் துறையில் மகப்பேறு விடுப்புக்கான செலவை நிறுவனங்களே ஏற்பதால், திருமணமான அல்லது குழந்தையுள்ள பெண்களை பணிக்கு அமர்த்துவதில் நிறுவனங்கள் தயக்கம் காட்டுவதாகத் தெரியவந்துள்ளது.

குறிப்பாக, தாய்மார்கள் தங்களின் குடும்பப் பொறுப்புகளுக்காக அதிக நேரத்தை செலவிடுவார்கள் என்ற தவறான புரிதலே இதற்கு காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் முக்கியமான திட்டங்கள் அல்லது தலைமைத்துவப் பொறுப்புகள் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

குறிப்பாக, கொழும்பில் பணிபுரியும் தாய்மார்களில் பலர் முறையான ஒப்பந்தங்கள் இன்றி குறைந்த வேதனத்தில் பணிபுரிவதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

கொழும்பில் பகுதிநேரம் பணி புரியும் தாய்மார்கள் சராசரியாக 13,000 ரூபாய்க்கும் குறைவான சம்பளத்தையே பெறுவதாகவும், முறையான குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் இல்லாதமை அவர்களைப் பொருளாதார ரீதியாகப் பாதித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், தனியார் துறையில் மகப்பேறு விடுப்புச் செலவை அரசாங்கமே ஏற்கும் சமூகக் காப்புறுதித் திட்டத்தை உருவாக்கவேண்டும் என சர்வதேச அமைப்புகள் பரிந்துரைத்துள்ளன. (அ)

# வர்த்தகர்களின் எரிபொருள் கியூ.ஆர். முறையில் மாற்றம்

கொழும்பு, மார்ச் 31

ஒரு வியாபார நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்து வாகனங்களுக்கும், அந்த நிறுவனத்தின் பெயரிலேயே எரிபொருள் கியூ.ஆர். குறியீடுகளைப் பெற்றுக்கொள்ளும் புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் ஆலோசகர் சுமுது ரத்நாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

வியாபார நிறுவனங்கள் தமது நிறுவனப் பதிவு இலக்கம் மற்றும் ஒரு கைப்பேசி இலக்கத்தை மாத்திரம் பயன்படுத்தி இந்த வசதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு தேசிய அடையாள அட்டை அவசியமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு வணிக நிறுவனத்தின் கீழ் இயங்கும் எத்தனை வாகனங்களாக இருந்தாலும், அவை அனைத்திற்கும் அந்த நிறுவனத்தின் பெயரிலான ஒரே கணக்கின் கீழ் புதிய எரிபொருள் ஒதுக்கீட்டுடன் கூடிய கியூ.ஆர். குறியீடுகளைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் பல வாகனங்களை முகாமைத்துவம் செய்யும் நிறுவனங்களுக்குப் பெரும் சுமை குறைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் கியூ.ஆர். குறியீட்டு முறைமையின் கீழ் இதுவரை சுமார் 6.4 மில்லியன் பயனாளர்கள் இணைந்துள்ளனர்.இதில் 2.8 மில்லியன் வாகனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இன்னும் சுமார் 100,000 பயனாளர்கள் மாத்திரமே இந்தக்கட்டமைப்பில் இணைய வேண்டியுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. (அ)

# தேசிய பாதுகாப்பு இப்போது ஆபத்தில்!

கொழும்பு, மார்ச் 31

அன்று வெற்றி கொள்ளப்பட்ட தேசிய பாதுகாப்பு இன்று ஓரளவுக்கு பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. கடந்த ஏழு ஆண்டுகளில் நமது நாடு ஐந்து சோகமான சம்பவங்களை எதிர்கொண்டன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடக்கம் மத்திய கிழக்கு போர் வரையிலான சம்பவங்களால் தேசிய பாதுகாப்பு அனைத்து வகைகளிலும் இல்லாது போயுள்ளது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர ஜயசேகராம விகாரையில் நேற்று திங்கள்கிழமை இடம்பெற்ற ரஜவத்தே வப்ப தேரருக்கு மியன்மாரின் அக்கமஹா சத்தம்ம ஜோதிகதஜ கௌரவ நாமம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இராணுவ ரீதியிலான பாதுகாப்பு மட்டுமல்லாது, பொருளாதார, சமூக, அரசியல், சுகாதார, கல்வி, வாழ்வாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளும் பெரும் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகியுள்ளன. அன்று தேசிய பாதுகாப்புக்காக மகா சங்கத்தினர் பெற்றுத் தந்த தலைமைத்துவத்தை தற்சமயத்திலும் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.

ஹூதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலால் பாப் அல் மந்தப் நீரிணையே மூடப்படும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது. இதனால் நமது நாட்டுக்கு மீண்டும் பல்வேறு பெரும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
31.03.2026 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## இராஜதந்திரிகளை சந்திப்பதில் அக்கறை காட்டும் தமிழ் அரசியல்வாதிகள்

வெளிநாடுகளின் இராஜதந்திரிகைளச் சந்திப்பது தமிழ் அரசியல் வாதிகளின் ஒரு பிரதான அரசியல் செயற்பாடாக இருந்து வருகிறது. தங்களது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு அவர்கள் அரசாங்கத்தை அணுகுகிறார்களோ இல்லையோ இராஜதந்திரிகளைத் தவறாது சந்தித்து முறையிடுகிறார்கள்.

இராஜந்திரிகளை தமிழ் அரசியல்வாதிகள் சந்திக்கும் படங்களை பெரும்பாலும் ஒவ்வொரு நாளும் ஊடகங்களில் காண கிறோம். கொழும்பில் மாத்திரமல்ல, வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் இந்த சந்திப்புக்கள் நடைபெறுகின்றன. இராஜதந்திரிகள் தற்போது அடிக்கடி வடக்கு,கிழக்கிற்கு விஜயம் செய்து சில சந்தர்ப்பங்களில் சில நாட்கள் தங்கியிருந்து மக்களின் பிரச்சினைகளை தாங்களாக நேரடியாக தெரிந்துகொள்வதுடன் அரசியல்வாதிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளிடமிருந்தும் கேட்டு அறிந்து கொள்கிறார்கள்.

போரின் முடிவுக்குப் பின்னரான காலப் பகுதியில் தமிழ் கட்சிகளின் அரசியல் வியூகங்கள பெருமளவுக்கு சர்வதேச சமூகத்தை நம்பியவையாகவே இருந்துவருகின்றன. போர்க்காலத்தில் இடம்பெற்ற உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைப்பதற்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு கொழும்புக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கும் சர்வதேச சமூகத்தின் உதவியையே தமிழ் அரசியல் சமுதாயம் பிரதானமாக நம்புகிறது.

ஆனால், இதுவரையில் அந்த நம்பிக்கையினால் கண்ட பயன் என்ன என்பது குறித்து முறையான ஒரு மதிப்பீட்டை தமிழ்க் கட்சிகள் செய்து பார்த்தி ருக்கின்றனவா என்பது சந்கேமே. போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை. தற்போதைய நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு இசைவான முறையில் அரசியல் விவேகத்துடன் முன்னெடுப்பதற்கு தமிழ்க் கட்சிகளினால் இயலாமல் இருப்பதே பெருமளவுக்கு அவர்கள் சர்வதேச சமூகத்தை நம்பியிருப்பதற்கு முக்கிய காரணமாகும்.

சர்வதேச சமூகம் என்பது வல்லாதிக்க நாடுகள் சமூகமே தவிர, வேறு ஒன்றுமில்லை. அது சோமாலியாவோ சூடானோ அல்ல். அந்த வல்லாதிக்க நாடுகள் அவற்றின் புவிசார் அரசியல் நலன்களைப் பேணுவதற்கு வசதியான முறையிலேயே மற்றைய நாடுகளின் பிரச்னைகளை அணுகும் என்பது தமிழ் அரசியல்வாதிகளுக்கு தெரியாத விடயம் அல்ல. போருக்கு பின்னரான அரசியல் சூழ்நிலையில் தங்களை பலம் பொருந்திய அரசியல் இயக்கமாக ஒன்றிணைப்பதற்கு தவறியதனாலேயே தமிழ்க் கட்சிகளுக்கு இந்த நிலை ஏற்பட்டது.

போர்க் குற்றங்களுக்காக இலங்கையை எந்தவொரு நீதிமன்றத்தின் முன்பாகவும் நிறுத்துவதற்கோ அல்லது தேசிய இனப்பிரச்சினைக்கு சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் நிறைவு செய்யக்கூடிய தீர்வைக் காணுமாறு நெருக்குதல் கொடுக்கவோ எந்தவொரு வெளிநாடும் தயாராயில்லை என்பதே இன்றைய யதார்த்தம்.

இனப்பிரச்னைக்கு சமஷ்டி முறையின் அடிப்படையிலான தீர்வே தேவை என்பதையும் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாகக் கூறிவருகிறார்கள். அதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால், சமஷ்டித் தீர்வொன்றை காண வேண்டும் என்று எந்தவொரு நாடும் இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்கப் போவதில்லை.

வேண்டுமானால் மாகாணசபை தேர்தல்களை நடத்தி அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வெளிநாடுகள் வலியுறுத்த முன்வரும் என்று எதிர்பார்க்கலாம்.

இன்றைய சூழ்நிலையில் சமஷ்டித் தீர்வுக் கோரிக்கை அல்ல , மாகாணசபைகளுக்கான தேர்தல் கோரிக்கையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஓரளவுக்கேனும் உடனடி நெருக்குதல் கொடுக்க உதவும் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் புரிந்துகொள்வது விவேகமானது.

# ஏப்ரல் முதல் பெற்றோல் ஏற்றுமதிக்கு ரஷ்யா தடை

மொஸ்கோ, மார்ச் 31

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் உலகளாவிய எரிசக்தி சந்தையில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையைத் தொடர்ந்து, ஏப்ரல் முதலாம் திகதி முதல் பெற்றோல் ஏற்றுமதிக்குத் தடை விதிக்க ரஷ்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தடையானது ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பித்து ஜூலை 31 ஆம் திகதி வரை நான்கு மாதங்களுக்கு அமுலில் இருக்கும் எனத் தெரிகிறது.

ரஷ்ய துணைப் பிரதமர் அலெக்சாண்டர் நோவாக், இது தொடர்பான தீர்மானத்தை உருவாக்குமாறு எரிசக்தி அமைச்சகத்துக்கு உத்தரவிட்டுள்ளார்

உள்நாட்டுச் சந்தையில் எரிபொருள் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதும், விலையை நிலைப்படுத்துவதும் இந்த அதிரடி முடிவின் முக்கிய நோக்கமாகும்.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் உலகளாவிய எண்ணெய் விலையில் கடும் ஏற்ற இறக்கங்களை உருவாக்கியுள்ளது.

ரஷ்யாவில் வசந்த கால விவசாயப் பணிகள் ஆரம்பிக்கவுள்ளதாலும், சுத்திகரிப்பு நிலையங்களில் பராமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளதாலும் உள்நாட்டு பெற்றோல் தேவையை உறுதி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது உக்ரேன் நடத்திய ட்ரோன் தாக்குதல்களால் உற்பத்தி தற்காலிகமாக பாதிக்கப்பட்டது. இதனால், சில பகுதிகளில் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டதை அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

மசகு எண்ணெய் சுத்திகரிப்பு அளவு, கடந்த ஆண்டைப் போலவே நிலையாக இருப்பதாக அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் ரஷ்யா சுமார் 50 இலட்சம் மெட்ரிக் தொன் பெற்றோலை ஏற்றுமதி செய்துள்ளது. இந்த நிலையில் புதிய தடையானது சீனா, பிரேசில் மற்றும் துருக்கி போன்ற ரஷ்ய எரிபொருளை நம்பியிருக்கும் நாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

மத்திய கிழக்கு போர் நெருக்கடியால் உலக சந்தையில் நிலவும் குழப்பம் விலை மாற்றங்களுக்கு காரணமாகிறது. அதேசமயம், ரஷ்ய எரிசக்திக்கு வெளிநாடுகளில் பெரும் தேவை இருப்பது சாதகமான விடயம் என அலெக்சாண்டர் நோவாக் குறிப்பிட்டார். (எ)

# போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் கமல் அமரசிங்க மீண்டும் விளக்கமறியலில்

கொழும்பு, மார்ச் 31

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க, ஏப்ரல் 10ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் அவர் நேற்றுக் காலை ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட கப் ரக வாகனம் ஒன்று தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில், வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு விசாரணையை ஆரம்பித்தது. பின்னர் மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பொறுப்பேற்றது.

சட்டவிரோதமாக வாகனத்தைப் பொருத்த வசதியாக, ஒரு கப் ரக வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட செஸி இலக்கத்தை மாற்றுவதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்து, எடைச் சான்றிதழ்களை பெற்றுக்கொண்டமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த வாகனத்திற்கு “ஈ” பிரிவு இலக்கத்தைப் பெற்றுக்கொள்ள உதவியமை, செஸி திருத்த ஆவணத்தை சட்டவிரோதமாக மறைத்து வைத்தமை மற்றும் பொய்யான தகவல்களை வழங்கி அந்த வாகனத்தைப் போலியான முறையில் பொருத்துவதற்குத் துணையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் கமல் அமரசிங்க மீது சுமத்தப்பட்டன.

இதற்கமைய, கடந்த 27 ஆம் திகதி பிற்பகல் கொழும்பு 07, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, குறித்த சந்தேக நபர் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவும் தனியான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

(எ)

# ஈழத்து சமய பெரியார்கள் குருபூஜை விழா

யாழ்ப்பாணம், மார்ச் 31

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தத் “திருவிளையாடல்” புராணச் சிறப்புச் சொற்பொழிவும், மாதந்தோறும் “ஈழத்துச் சமயப் பெரியார்கள்” குருபூஜை விழாவும் தொடர் 11 நல்லை ஆதீன முதலாவது குருமகா சந்நிதானம் சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குருபூஜை விழா அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் எதிர்வரும் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் ஆன்மிக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்

சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், சைவப்புலவர் செ. த. குமரன் “சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் சமயப்பணி” என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும். தொடர்ந்து

ஆன்மிக விருந்தினர் உரையும், குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
குடும்பத்தில் உங்களின் நேரத்தை செலவழிப்பீர்கள். உங்களை சுற்றி உள்ளவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**இடபம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புது வேலை கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வாகன வசதிப் பெருகும்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப்போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்**
உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீரென்று அறிமுகமாகும் நபரால் பயனடைவீர்கள்.

**விருட்சிகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**தனுசு**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். உறவினர் நண்பர்களால் செலவினங் கள் அதிகரிக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்குப் பிடித்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

# பண்டிகை காலத்தில் இணைய மோசடி அதிகரிக்கும் அபாயம்!

### மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச் 31

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு, சமூக ஊடகங்களை பயன்படுத்தும் போதும், அறிமுகமில்லாத நபர்களிடமிருந்து வரும் செய்திகள் அல்லது அழைப்புகளுக்கு பதிலளிக்கும் போதும் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் தனிப்பட்ட தகவல்கள், கடவுச்சொற்கள் அல்லது ஒருமுறை பயன்படுத்தும் கடவுச்சொற்களை பெற்றுக்கொள்ளும் மோசடி முயற்சிகள் அதிகரிக்கக் கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக பொது மக்களிடமிருந்து கடன் அட்டை விவரங்களைப் பெற்றுக்கொள்ள மோசடி செய்பவர்கள் முயற்சிப்பதாக தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவின் தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ஷாருகா தமுனுபொல தெரிவித்தார்.

மோசடி செய்பவர்கள் பெரும்பாலும் வங்கிகள் அல்லது விமான நிறுவனங்களின் பிரதிநிதிகள் போல நடித்து, சமூக ஊடகங்கள் ஊடாக அசாதாரணமான அதிக தள்ளுபடிகளை வழங்கி பொருட்களை விற்க முயற்சிப்பார்கள்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் பீதியடைய வேண்டாம். உத்தியோகபூர்வ வழிகள் ஊடாக சம்பந்தப்பட்ட வங்கி அல்லது விமான நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும். சந்தேகம் ஏற்பட்டால் பொலிஸாருக்கு அறிவிக்கவும்.

இவ்வாறான மோசடிகள் தொடர்பில் மாதந்தோறும் 150 முதல் 200 முறைப்பாடுகள் எங்களுக்கு கிடைக்கின்றன. பண்டிகை காலத்தையொட்டி எதிர்வரும் வாரங்களில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# நீர்வேலியில் சுக்கிரவார சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 31

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 50 ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 04 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 05.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இரா ஜேந்திர சுவாமிநாதக்குருக்க ளின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாத னும், சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் செ. த. குமரன் "வில்வலன் வாதாவிவதைப் படலம் "என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார். சொற்பொழிவிலிருந்து

நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# துணுக்காய் பிரதேச செயலக கலைஞர் ஒன்றுகூடல் நிகழ்வு



முல்லைத்தீவு, மார்ச் 31

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன், துணுக்காய் பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த கலைஞர் ஒன்றுகூடல் நிகழ்வு துணுக்காய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார உத்தியோகத்தர் திருமதி ஆ. நிஷாந்தினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் பல பிரதேச கலைஞர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வின் மூலம் துணுக்காய் பிரதேச கலைஞர்களின் திறமைகள் மற்றும் ஆளுமைகளை வெளிக்கொணரும் நோக்கில் நாடகம், பாடல், தனிநடிப்பு, நடனம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

மேலும், 2025 ஆம் ஆண்டில் அதிஉயர் விருதான "கலாபூஷணம்" விருதைப் பெற்ற மூத்த கலைஞர் சிற்றம்பலம் சண்முகதாதனுக்கு துணுக்காய் பிரதேச செயலகம் சார்பில் சிறப்பு கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

அத்துடன், இந்த நிகழ்வில் தமது கலை ஆற்றுகைகளை வெளிப்படுத்திய கலைஞர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (எ)

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 31

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 51 எதிர்வரும் 03ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், சைவப்புலவர் க. கைலநாதனின் "பாண்டியன் சுரந்தீர்த்த படலம்" என்னும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# நீர் விநியோகத்தில் சிக்கல்!

கொழும்பு, மார்ச் 31

நாட்டில் தற்சமயம் நிலவும் வறட்சியமான மற்றும் குறைந்த மழை வீழ்ச்சிப் பதிவு காரணமாக அடுத்த இரண்டு முதல் மூன்று வாரங்களுக்கு தினமும் பல மணிநேரங்களுக்கு நீர் விநியோகத்தைக் கட்டுப்படுத்த வேண்டியிருக்க லாம் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் சந்தன பண்டார தெரிவித்துள்ளார்.

அத்தகைய நீர் விநியோகத் தடைகள் இன்னும் அமுல்படுத்தப்படவில்லை என்றாலும், தற்போதைய வானிலை நிலவரத்தால் வரும் காலத்தில் 24 மணி நேரமும் தொடர்ச்சியான நீர் விநியோகத்தைப் பராமரிப்பது கடினமாகலாம் என்றும் அவர் கூறினார்.

அம்பத்தளை உள்ளிட்ட நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உற்பத்தித் திறன் இதுவரை பாதிக்கப்படவில்லை என்றாலும், உயரமான பகுதிகளுக்கான நீர் விநியோகம் ஏற்கனவே குறைந்த அழுத்த நிலையில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மீண்டும் சடுதியாக உயர்ந்த மசகு எண்ணெய் விலை!

கொழும்பு, மார்ச் 31

ஈரானுக்கு எதிரான போர் தொடங்கி ஒரு மாதத்தை கடந்த நிலையில், நேற்று ஆசிய சந்தைகள் திறக்கப்பட்டபோது சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை பாரிய அதிகரிப்பை பதிவு செய்தது.

ஒரு பீப்பாய் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் 115. 84 அமெரிக்க டொலராக உயர்ந்தது. இது 2. 9 சதவீத அதிகரிப்பாகும்.

கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி அன்று ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தாக்குதல்களை தொடங்குவதற்கு முன்னர், ஒரு பீப்பாய் எண்ணெய் சுமார் 72 அமெரிக்க டொலருக்கு வர்த்தகம் செய்யப்பட்டது.

கடந்த 19 ஆம் திகதி அன்று கச்சா எண்ணெய் விலை 118 அமெரிக்க டொலராக உச்சம் தொட்டது. வெள்ளிக்கிழமை பிற்பகல் வரை இது 112இற்கு சற்று குறைவாக இருந்தது.

எனினும், இது போருக்கு முந்தைய விலையை விட கணிசமான உயர்வாகும்.

இதன்படி, ஒரு பீப்பாய் பிரெண்ட் ரக மசகு எண்ணெயின் விலை 2. 9 சதவீதத்தால் அதிகரித்து 115.84 டொலராக பதிவானது.

கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களுக்கு முன்னர், ஒரு பீப்பாய் எண்ணெய் சுமார் 72 டொலர் என்ற அளவிலேயே வர்த்தகம் செய்யப்பட்டது.

எனினும், போர் ஆரம்பமானதில் இருந்து சர்வதேச சந்தையில் எண்ணெய் விலையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. (எ)

# நாட்டில் 20 இலட்சம் பேர் சிறுநீரக நோயால் பாதிப்பு

## விசேட மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 31

நாட்டில் சமீபகாலமாக சிறுநீரக நோய்களுக்கு ஆளாகும் மக்களின் வீதம் கணிசமாக அதிகரித்துள்ளது.

இது ஒரு பெரிய சுகாதார நெருக்கடியாக உருவெடுத்து வருகிறது என்று சிறுநீரக நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் நாலக ஹேரத் தெரிவித்தார்.

சர்வதேச சிறுநீரக தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

சிறுநீரக நோய்கள் பொதுவாக நாட்பட்ட நோய்களாகும் என்றும், நோய் தீவிரமடையும் போது சிறுநீரகங்கள் செயலிழக்கும் அபாயம் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஆரம்ப நிலையில் இந் நோய்க்கான தெளிவான அறிகுறிகள் தெரியாததால், நோய் தீவிரமடைந்த பின் மட்டுமே அறிகுறிகள் வெளிப்படுகின்றன- என்றார். (எ)

# மொஹமட் பைசால் எம்.பி. பயணித்த கார் விபத்து!

சிலாபம், மார்ச் 31

தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் பைசால் பயணித்த கார், சிலாபம் பண்டாரவத்தை வளைவில் வீதியை விட்டு விலகி மதில் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் இரவு 11. 45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதுடன், அந்த நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மாத்திரமே காரில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விபத்தால் கார் மற்றும் மதிலுக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. எவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினருக்கு பாதிப்பு ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கூர்மையான ஆயுதத்தால் தாக்கி பாணந்துறையில் ஒருவர் கொலை

களுத்துறை, மார்ச் 31

பிங்வத்த, லெஸ்லி குணவர்த்தன மாவத்தை பகுதியில் நேற்று முன்தினம் இரவு கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு காயமடைந்த நபர் ஒருவர் பாணந்துறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பிங்வத்த, பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவர் என தெரியவந்துள்ளது.

குறித்த நபருக்கும் அயல் வீட்டைச் சேர்ந்த ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில், அந்த நபர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கி இந்தக்கொலையை செய்தமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)




# ஓமானில் கைது செய்யப்பட்ட மிதிகம சூட்டி இலங்கைக்கு

கொழும்பு, மார்ச் 31

ஓமானில் கைது செய்யப்பட்ட திட்டமிட்ட குற்ற கும்பலைச் சேர்ந்த உறுப்பினரான மிதிகம சூட்டி என்ற பிரபாத் மதுசங்க நேற்று அதிகாலை இலங்கைக்கு கொண்டு வரப்பட்டார்.

ஓமானின் மஸ்கட் நகரிலிருந்து நேற்று அதிகாலை 04. 27 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த சலாம் எயார் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் மூலம் சந்தேகநபர் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டார்.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இவர், சர்வதேச பொலிஸாரால் சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், ஓமான் பாதுகாப்பு பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

இவரை இலங்கைக்கு கொண்டு வருவதற்காக, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மூன்று அதிகாரிகள் ஓமானுக்குச் சென்ற நிலையில் நேற்று அதிகாலை நாட்டுக்கு கொண்டு வரப்பட்டார். (எ)

# சட்டவிரோதமாக தங்கியிருந்த 125 சீனப்பிரஜைகள் நாடு கடத்தல்

கொழும்பு, மார்ச் 31

நாட்டில் தங்குவதற்கான செல்லுபடியாகும் விசா இன்றி சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த 125 சீனப் பிரஜைகள் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை சீனாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

நாடு கடத்தப்பட்டவர்களில் 6 சீனப் பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் சுற்றுலா விசா மூலம் இலங்கைக்கு வருகை தந்து, அநுராதபுரம் பகுதியில் கணினித் துறையில் தொழில்களில் ஈடுபட்டு வந்த நிலையில், கடந்த 17 ஆம் திகதி குடிவரவு குடியகல்வு திணைக்கள விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளரின் உத்தரவின் பேரில், நாடுகடத்தப்படும் வரை வெலிசறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டனர்.

இது குறித்து இலங்கைக்கான சீனத் தூதரகம் ஊடாக அந்த நாட்டுக்கு அறிவிக் கப்பட்டதையடுத்து, இவர்களை அழைத்துச் செல்வதற் காக "சீனா ஈஸ்டர்ன்" விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானமொன்று கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

குறித்த விசேட விமானத்தில் சீன மருத்துவர்கள் மற்றும் அந்த நாட்டு குடிவரவு அதிகாரிகள் குழுவொன்றும் வருகை தந்திருந்தது. இந்த நிலையில்,

நேற்று அதிகாலை 12. 30 மணியளவில் 125 சீனப் பிரஜைகள், சீன அதிகாரிகள் மற்றும் இலங்கையின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தைச் சேர்ந்த 06 அதிகாரிகள் சகிதம் இந்த விமானம் சீனாவின் வூஹான் நகரை நோக்கிப் புறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொழும்பிலிருந்து மட்டக்களப்பில் பெண்களை கடத்தியவர் கைது!

மட்டக்களப்பு, மார்ச் 31

மட்டக்களப்பு- நெல்லிக் காட்டு வயல் பகுதியில் இடம்பெற்ற பாழடைந்த கிணறு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண பெருங் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெய்வநாயகம் மேனன் இதனை உறுதிப்படுத்தினார்.

பெண்களுக்கு மயக்க மருந்து கொடுத்துக் கடத்தி, அவர்களின் தாலி உள்ளிட்ட தங்க ஆபரணங்களைக் கொள்ளையிட்டு, கிணற்றில் வீசி எறிந்து கொலை செய்து வந்த கும்பலின் பிரதான சூத்திரதாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 20ஆம் தேதி கொக்கட்டிச்சோலை, நெல்லிக் காட்டு வயல் பிரதேசத்திலுள்ள பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து, வவுணதீவு கொத்தியாவலைப் பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது இளம் தாய் ஒருவர் உயிருடனும், ஏற்கனவே காணாமல் போனதாகக் கருதப்பட்ட மற்றொரு பெண் சடலமாகவும் மீட்கப்பட்டனர். அத்துடன், அந்த இளம் தாயின் 3 வயது 4 மாதங்கள் நிரம்பிய சிறுமி, வயல் பகுதியில் அழுதுகொண்டிருந்த நிலையில் உயிருடன் மீட்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில்

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வத்தளை பகுதியில் வைத்து சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக மட்டக்களப்புக்கு கொண்டு வரப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# கொடூர கொலைக்கு தயாரான நால்வர் கைது

கொழும்பு, மார்ச் 31

நபர் ஒருவரை கொலை செய்யத் திட்டமிடுவதற்காக ஒன்றுகூடியிருந்த நான்கு பேர், மீட்டியாகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நால்வரும் மீட்டியாகொட பகுதியில் அமைந்துள்ள, வெளிநாட்டில் தலைமறைவாக இருக்கும் பாதாள உலகக் குழுவொன்றின் தலைவர் "கரந்தெனிய சுத்தா" என்பவரது சகோதரனின் வீட்டில் தங்கியிருந்த போதே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 22 முதல் 37 வயதுடையவர்கள் என்று அடையாளம் காணப்பட்டனர்.

இவர்களிடமிருந்து ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும், ஆறு தோட்டாக்களும் மீட்கப்பட்டன என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சந்தேக நபர்களிடமிருந்து 50 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# "மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவது முக்கியம்"

கொழும்பு, மார்ச் 31

எரிபொருள் பயன்பாட்டை குறைக்க மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவது முக்கியம் என்று இலங்கை நிலையான எரிசக்தி அதிகார சபையின் தலைவர் டபிள்யூ. ஜே. பண்டார தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த பொதுமக்கள் முன்வர வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் வலுசக்தியை வினைத்திறனாகவும் உரிய முகாமைத்துவத்துடனும் பயன்படுத்த வேண்டும்.

மாலை 5 மணி முதல் அதிகாலை வரை மின்சாரத்தை உற்த்தி செய்வதற்கு எரிபொருட்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

பொதுமக்களின் பங்களிப்பு இந்த நேரத்தில் அவசியமானது என்றும், எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்க மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது முக்கியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எரிபொருட்களை எரிப்பதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அதிக செலவு ஏற்படும் என்றும், மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் மூலம் மின்சார முகாமைத்துவத்தை மேற்கொள்வதானது மக்களின் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதுடன், எரிபொருள் எரிப்பதையும் குறைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## போதைப்பொருளுடன் இருவர் கைதாகினர்!

கொழும்பு, மார்ச் 31

கணேமுல்ல பகுதியில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுடன் நேற்றுக்காலை இருவர் கைது செய்யப்பட்டனர்.

வீதித் தடையில் கடமையில் ஈடுபட்டிருந்த கோனஹேன விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகள், சந்தேகத்துக்கிடமான மோட்டார் சைக்கிள் ஒன்றை சோதனையிட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது அவர்களிடமிருந்து 470 கிராம் ஐஸ் ரக போதைப்பொருளும், 230 கிராம் ஹெரோயின் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 25 மற்றும் 26 வயதுடைய பொல்லத்த மற்றும் கணேமுல்ல பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கணேமுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கட்டுத்துப்பாக்கியுடன் மட்டக்களப்பில் ஒருவர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 31

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்டகச் சக்கொடிசுவாமிமலை பகுதியில் கட்டுத் துப்பாக்கி வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை கொக்கட்டிச்சோலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவரை கைது செய்தனர்.

38 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# ரயில் மோதி காயங்களுடன் சுற்றித்திரியும் காட்டு யானை

மட்டக்களப்பு, மார்ச் 31

பொலநறுவை - மட்டக்களப்பு பிரதான ரயில் மார்க்கத்தில் அதிவேகமாக வந்த ரயிலில் மோதிய காட்டு யானை ஒன்று, கால்களில் ஏற்பட்ட பலத்த காயங்களுடன் மெனிக்திவெல கிராமத்துக்குள் சுற்றித் திரிவதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி ரயில், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 02: 30 மணியளவில் வெலிகந்த சேவாபிட்டிய பகுதிக்கு அருகில் பயணித்த போதே இந்த விபத்து இடம் பெற்றது.

ரயில் மோதலில் யானையின் இரண்டு பின்னங்கால்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

இந்த யானை மிகவும் கவலைக்கிடமான நிலையில் பிரதான வீதிகள் மற்றும் கிராமப்புற வீதிகளின் ஊடாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

காயமடைந்த யானைக்குச் சிகிச்சை அளிப்பதற்காக கிரிதலே வனவிலங்கு கால்நடை மருத்துவர் உள்ளிட்ட வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களக் குழுவினர் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்- என்றார். (எ)

# நீருக்கடியில் இயங்கிய மதுபான உற்பத்தி நிலையம்

### பொலிஸாரால் முற்றுகை

மட்டக்களப்பு, மார்ச் 31

மட்டக்களப்பு- காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிரயாதீவு வாவியை அண்டிய அடர்ந்த காட்டுப் பகுதியில் நீருக்கடியில் சூட்சூமமான முறையில் நீண்ட நாட்களாக இயங்கி வந்த சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் ஒன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் 8 பீப்பாய்களில் இருந்த 800 லீற்றர் கோடா மற்றும் 160 லீற்றர் சட்டவிரோத மதுபானம் என்பன கைப்பற்றப்பட்டன. அதனை தயாரிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எம். ஏ. றஹீம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்த சுற்றிவளைப்பை முன்னெடுத்தனர்.

எவ்வாறாயினும் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். (எ)

## பொலிஸ் சுற்றிவளைப்பு 563 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மார்ச் 31

நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 563 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 26,436 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 25 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 272 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 155 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 228 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 78 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,321 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# போதைப்பொருட்களுடன் ஒரே நாளில் 980 பேர் கைது

கொழும்பு, மார்ச் 31

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 980 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 03 பேர் கைது செய்யப்பட்டனர். இதே வேளை, 965 சோதனைகள் நடத்தப்பட்டதுடன், இருவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டனர்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப் பொருட்களையும் இதன் போது பொலிஸார் கைப்பற்றினர்.

இதற்கமைய, சந்தேக நபர்களிடமிருந்து 528 கிராம் ஹெரோயின், 01 கிலோ 362 கிராம் ஐஸ், 02 கிலோ 445 கிராம் கஞ்சா, 17 கஞ்சா செடிகள், ஒரு மில்லி கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 626 போதை மாத்திரைகள், 237 கிராம் மதனமோதகம் மற்றும் 04 கிலோ 195 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# நிலக்கரி மோசடியில் அநுரவும் பங்காளி!

கொழும்பு, மார்ச் 31

தரமற்ற நிலக்கரி கொள்வனவு தொடர்பில் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி மற்றும் நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் மீது மாத்திரம் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது. அமைச்சரவையின் தலைவரான ஜனாதிபதி அநுரவும் இந்த மோசடியின் பங்காளியாக உள்ளார். அவரும் பொறுப்புக்கூற வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவிசாவளை பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அரச மருத்துவ...

நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும் மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)

## முல்லைத்தீவு மீனவர்...

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில், சட்டவிரோத மீன்பிடி முறைகளுக்கு தடை விதிக்கக் கோரி இந்த போராட்டம் நடத்தப்படுகின்றது.

இந்தப் போராட்டத்தில், வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இணைந்து கொண்டுள்ளார்.

நேற்று போராட்ட இடத்திற்கு விரைந்த தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர், மீனவர்களின் கோரிக்கைகளுக்கு, கடற்றொழில் அமைச்சர் ஊடாக தீர்வை பெற்றுத்தருவதாக உறுதியளித்தார். (அ)

## எரிபொருள்...

இலங்கையிலுள்ள 13 விசேட பொருளாதார நிலையங்களுக்கு சுமார் 3 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் தமது விளைச்சலை வழங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, நேற்று முன் தினம் மாத்திரம் சுமார் 20 இலட்சம் கிலோகிராம் மரக்கறிகள் சந்தைக்கு கிடைத்த போதிலும் வியாபாரிகள் வருகை தரதாத காரணத்தினால் போட்டித் தன்மை குறைந்து மரக்கறி விலைகளும் மிக மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

பாரவூர்தி உரிமையாளர்களுக்கு வாரத்தில் குறைந்தது 4 நாள்கள் டீசல் கிடைக்காத காரணத்தினால் அவர்கள் சந்தைகளுக்கு வருகை தருவதை தவிர்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், மரக்கறிகள் மற்றும் பழங்கள் விநியோகம் பாதிக்கப்பட்டு அவை பழுதடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நேற்றைய நிலவரத்தின் படி, கறிமிளகாய் 120 ரூபாய்க்கும் தக்காளி 30 முதல் 40 ரூபாய்க்கும் பீட்ரூட் மற்றும் கோவா 40 ரூபாய்க்கும் கத்தரிக்காய் 80 முதல் 100 ரூபாய்க்கும் காலிபிளவர் 80 முதல் 100 ரூபாய்க்கும் மொத்த விலையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. (அ)

## வெளிநாடுகளில்...

பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

நாட்டிற்கு நேற்று அழைத்து வரப்பட்ட திட்டமிட்ட குற்ற கும்பல் உறுப்பினரான மிதிகம சூட்டி என்ற பிரபாத் மதுசங்கவும் குறித்த நபர்களில் அடங்குகின்றார் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவர் கொலை, பாரிய கொள்ளை, துப்பாக்கி வைத்திருத்தல், ஆயுதக் கடத்தல், கள்ளப் பணப் புழக்கம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்.

இவரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி, மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைத்து விசாரணை செய்ய அனுமதி பெறப்படவுள்ளது.

சர்வதேச உறவுகள் காரணமாக, சிவப்பு அறிவித்தல் இன்றியும் சந்தேகநபர்களை நாட்டுக்கு அழைத்து வர முடிகிறது. அவ்வாறு 13 சந்தேக நபர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட இரு சந்தேகநபர்களும் சிவப்பு அறிவித்தல் இன்றியே கொண்டு வரப்பட்டனர்.

தற்போதுவரை 88 திட்டமிட்ட குற்றவாளிகளுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட இஷாரா செவ்வந்தியின் பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவருக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (அ)

## சிறீலங்கன்...

விலகியுள்ளார்.

திறைசேரி செயலாளரால் புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, ஏ.கே.டி.டி. டிமல் அரந்தர இந்த இரு நிறுவனங்களினதும் பதில் தலைவராகச் செயற்படுவார்.

தலைவர் சரத் கணேகொடவுடன் இணைந்து, நிறுவனத்தின் பணிப்பாளர் ரோஹன் குணதிலக்கவும் சிறீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் சிறீலங்கன் கேட்டரிங் ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளிலிருந்தும் விலகியுள்ளார். (அ)

## நாளை முதல்...

கட்டண திருத்தத்தை மேற்கொள்ள இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும், தற்போதுள்ள நெருக்கடி நிலையை கருத்திற் கொண்டு அலகுகளின் அடிப்படையில் பல்வேறு கட்டங்களின் கீழ் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது

அதன்படி 0 - 30 வரையான அலகுகளுக்கு 4.3 வீதம் மின் கட்டணம் அதிகரிக்கப்படுகின்றது.

இதற்கமைய 15 ரூபாய் மாதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

31 முதல் 60 வரையான அலகுகளுக்கு 6.9 வீதம் அதிகரிக்கப்படுகின்றது.

மாதாந்தம் 45 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது.

61 - 91 அலகுகளுக்கு 6.9 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் மாதாந்த 120 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது.

91-180 அலகுகளுக்கு 7.2 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் மாதாந்த 420 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

## அம்புலன்ஸ்...

வழங்காதமை, வைத்தியர் கடமையில் இல்லாதமை தொடர்பாக வெளியான செய்தி தொடர்பில் இளவாலை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் விளக்கம் கோரி இருந்தது.

அதற்கு அமைய, இளவாலை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி மற்றும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் தமது விளக்கங்களை நேற்று திங்கள்கிழமை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்திற்கு சம்பித்துள்ளதுள்ளனர்.

இளவாலை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி தமது அறிக்கையில்-

உணவு இடைவேளைக்கு நான் சென்ற சந்தர்ப்பத்திலேயே இச்சமபவம் நடைபெற்றது. எமது வைத்தியசாலைக்கு நிரந்தர சாரதி இல்லாமையால், அபுலன்ஸ் தற்காலிகமாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியுடன் காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு விடுவித்துள்ளோம்.

மேலும் தமது வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர் இதுவரையும் நியமனம் செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

அதேவேளை யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தனது அறிக்கையில்-

இனிவரும் காலங்களில் வைத்தியர்கள் தொடர்ந்து வைத்திசாலையில் தங்கியிருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

இளவாலை பிரதேச வைத்தியசாலைக்கு தற்போது மீண்டும் 28ஆம் திகதி அம்புலன்ஸ் ஒன்று விடுவிக்கப்பட்டுள்ளது, இவ் வைத்தியசாலைக்கு தாதிய உத்தியோகத்தருக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணி இதுவரை இல்லாத காரணத்தால் முகாமைத்துவ ஆளணி பிரிவுக்கு இவ்வைத்தியசாலைக்கு தாதிய உத்தியோகத்தர் ஆளணியை உருவாக்குவதற்கான கோரிக்கையைசமப்பித்துள்ளோம் என தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## சட்ட விரோதமாக...

செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார் வங்காலை பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 26 முதல் 40 வயதுக்குட்பட்ட சந்தேக நபர்களையும், கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகள் மற்றும் சுழியோடி உபகரணங்களை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## யூரியா உர...

யூரியா உரத்தை, விவசாய சேவை நிலையங்கள் ஊடாக விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாட்டின் அனைத்து விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் தெளிவுபடுத்துவதற்கு விவசாய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உரங்களை விநியோகிக்கும்போது, ஒவ்வொரு விவசாயியும் பயிரிடும் நிலப்பரப்பின் அளவுக்கு ஏற்ப, தேவையான அளவு உரத்தை மாத்திரம் வழங்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போதுள்ள உரக் கையிருப்பைச் சரியாக முகாமைத்துவம் செய்து, 2026 சிறுபோக நெற்செய்கை எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்படுவதை உறுதி செய்யுமாறு அனைத்து விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் திணைக்களம் பணிப்புரை விடுத்துள்ளது. (அ)

## தரம் ஐந்து...

மாணவர்களுக்கு வருடாந்தம் நடத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சை இந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று இலங்கை பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அரசாங்கப் பாடசாலை ஒன்றில் அல்லது அரசாங்க அனுமதிபெற்ற தனியார் பாடசாலை ஒன்றில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்கள் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் நேற்று - மார்ச் 30 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நிகழ்நிலை வாயிலாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

பரீட்சையில் சித்தியடையும், குறைந்த வருமானமுடைய குடும்பத்தைச் சேர்ந்த, 2027 ஆம் ஆண்டு ஜனவரி 31 இல் 11 வயதுக்குக் குறைந்த மாணவர்கள் உதவித்தொகை பெறுவதற்கான தகுதியைப் பெறுவார்கள் என்றும், மேலதிக தகவல்களை https://onlineexams.gov.lk/eic என்ற வலைத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்த அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## டிராக்டரால் மோதி...

சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த சனிக்கிழமை சம்பவ இடத்திற்கு இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் விரைந்துள்ளனர்.

பொலிஸாரை கண்டதும், உழவு இயந்திரத்தை செலுத்தி வந்தவர், தான் தப்பிப்பதற்காக அதன் வேகத்தை அதிகரித்து பொலிஸார் இருவர் மீதும் மோதி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

உழவு இயந்திரம் மோதியதில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜண்ட் தர அதிகாரியான ஹெட்டியாராட்சி அல்பேட் (வயது 50) என்பவர் சம்பவ இடத்திலையே உயிரிழந்துள்ளார். அவருடன் சென்ற மற்றைய பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்

சம்பவம் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், உழவு இயந்திரத்தின் உரிமையாளரை நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவ தினத்தன்று , சாரதிக்கு உதவியாளராக சென்ற இளைஞர் தலைமறைவாக இருந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை குறித்த இளைஞர் பாலாவி பகுதியில் தலைமறைவாக இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் அந்த இளைஞனை கைது செய்துள்ளனர்

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் , சம்பவ தினத்தன்று , உழவு இயந்திரத்தை செலுத்திய பிரதான சந்தேக நபர் தலைமறைவாக உள்ள நிலையில் தொடர்ந்தும் தேடுதல் நடாத்தி வருவதாக தெரிவித்தனர். (அ)

## அரச அலுவலகங்களில்...

வெளியிடப்பட்டுள்ளது.

வளச் சேமிப்பைக் கருத்தில் கொண்டு வெளியிடப்பட்டுள்ள இந்தச் சுற்றறிக்கையில்,

அமைச்சுக்கள், மாகாண சபைகள், மாவட்ட செயலகங்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் உட்பட அனைத்து அரச அலுவலகங்களிலும் பிற்பகல் 3 மணிக்குப்பின் வளிச் சீராக்கி பாவனை நிறுத்தப்பட வேண்டும்.

அதே போல தனியார் துறையினரும் இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ள இலத்திரனியல் விளம்பரப் பதாதைகளை இரவு 8 மணியுடன் நிறுத்துமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தெரு விளக்குகளை முன்னிரவு 6 மணி முதல் இரவு 10 மணி வரை நிறுத்துவதற்கு ஏற்ற வகையில் உள்ளூராட்சி அமைப்புகள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், 100 பேருக்கும் அதிகளவானோர் பங்குபற்றக் கூடிய பொது நிகழ்வுகள் மற்றும் களியாட்ட விழாக்களுக்குத் தேசிய மின்னிணைப்பின் ஊடாக மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும்

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர நாயகத்தின் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# வடக்கில் சில உள்ளூராட்சி சபைகள் மிக பின்தங்கிய வருமான நிலையில்!

## ஆளுநர் வேதநாயகன் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், மார்ச் 31

வருமானம் குறைந்த உள்ளூராட்சி மன்றங்கள் தங்களது வருமானங்களை அதிகரித்துக் கொள்வதற்கு, வினைத்திறன் அடிப்படையிலான மூலதன மானிய நிகழ்ச்சித் திட்டம் பெரும் உதவியாக அமையும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள சில உள்ளூராட்சி மன்றங்கள் மிகவும் பின்தங்கிய வருமான நிலையிலேயே காணப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்தை ஈட்டும் செயற்றிட்டங்களுக்கான வினைத்திறன் அடிப்படையிலான மூலதன மானிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றங்கள் தங்களது சொந்த வருமானத்திலேயே பணியாளர்களின் சம்பளத்தை வழங்க வேண்டியுள்ளமையால், அவற்றுக்கான வருமானங்களை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகிறது.

வடக்கு மாகாணத்திலுள்ள சில உள்ளூராட்சி மன்றங்கள் மிகவும் பின்தங்கிய வருமான நிலையிலேயே காணப்படுகின்றன. எனவே, இந்த மூலதன மானிய நிகழ்ச்சித்திட்டம் அவற்றினை நிச்சயம் வலுவூட்டும்

இந்தத் திட்டத்தின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்கள் தங்களது சொத்துக்களை அதிகரித்து வருமானத்தைக் கூட்டிக்கொள்ள முடியும் வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் நிலையில், அது தொடர்பான விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளன.

இந்த நிதியைப் பயன்படுத்தி சுற்றுலாத்துறை சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முன்மொழிந்துள்ளமையின் ஊடாக அவற்றின் வருமானங்கள் நிச்சயம் அதிகரிக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் இந்தச் செயற்றிட்டங்களை நிறைவுறுத்துவதற்குத் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

இந்தத் திட்டத்துக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள 22 பிரதேச சபைகளால் 54 திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், ஒவ்வொரு பிரதேச சபைக்கு ஒவ்வொரு திட்டம் என்ற அடிப்படையில் 22 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன-என்றார்.

(அ)

## சீனாவில் நடைபெற்ற ஆசியாவுக்கான "போவோ" மன்ற மாநாட்டில் சபாநாயகர்



கொழும்பு, மார்ச் 31

இலங்கை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன கடந்த 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை சீன மக்கள் குடியரசின் ஹைனான் மாகாணத்தில் நடைபெற்ற ஆசியாவுக்கான போவோ மன்றத்தின் வருடாந்த மாநாட்டில் பங்கேற்றார்.

இந்த தூதுக் குழுவில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் சட்டவாக்க சேவைகள் பணிப்பாளரும், தொடர்பாடல் பதில் பணிப்பாளருமான ஜயலத் பெரேரா ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

சபாநாயகர், ஆசியாவுக்கான போவோ மன்றத்தின் தலைவர் பான்கீ - மூன் மற்றும் மன்றத்தின் பொதுச் செயலாளர் ஜாங் ஜுன் ஆகியோரை சந்தித்தார்.

அதிகரித்து வரும் உலகளாவிய நிலையற்ற தன்மையின் இக்காலத்தில், ஆசியாவில் உரையாடல் மற்றும் ஒத்துழைப்பிற்கு ஆசியாவிற்கான போவோ மன்றத்தின் முக்கியத்துவத்தை பான் கி-மூன் இச்சந்திப்பில் வலியுறுத்தினார். தற்போதைய சவால்களை எதிர்கொள்ள வலுவான அரசியல் தலைமை அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும், இலங்கையின் பிராந்தியப் பங்களிப்பையும் அவர் பாராட்டினார். ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் தான் இலங்கைக்கு மேற்கொண்டமையை நினைவுகூர்ந்த பான் கி-மூன், மோதலுக்குப் பின்னர் அந்நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தையும் பாராட்டினார். (அ)

## பதுளை-கண்டி வீதியில் விபத்து: கடற்படை அதிகாரி உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 31

பதுளை - கண்டி வீதியில் நேற்று திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் கடற்படை அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

அலவத்துர, கெட்டியமுல்ல பகுதியைச் சேர்ந்த 33 வயதான அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பதுளையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த அரை சொகுசு தனியார் பஸ், முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முயன்றபோது மோட்டார் சைக்கிளுடன் பஸ் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## பதவியுயர்வில் அநீதி முறையிட்டார் ஷானி

கொழும்பு, மார்ச் 31

பிரதி பொலிஸ் மா அதிபர் பதவியை தனக்கு வழங்குமாறு பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பொலிஸ்மா அதிபர் அளித்த பரிந்துரை நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஷானி அபேசேகர நிர்வாக மேன்முறையீட்டுத் தீர்ப்பாய ஆணைக்குழுவில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் கே.டி. சித்ரசிறி தலைமையிலான ஆணைக்குழுவின் முன் அபேசேகரவின் முறைப்பாடு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பொலிஸ் மா அதிபர் செய்த பரிந்துரையை பொலிஸ் ஆணைக்குழு நிராகரித்ததால் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், அபேசேகர நிரந்தரப் பணியிலிருந்து ஓய்வு பெற்று ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருவதால்,

அது தொடர்பான பரிந்துரையை ஏற்றுக்கொள்வதில் சட்ட ரீதியான சிக்கல் இருப்ப தாகவும் அதனால் அது நிராகரிக்கப்பட்டதாகவும் பொலிஸ் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், இந்த விவகாரம் தொடர்பாக அடுத்த மாதம் 23ஆம் திகதி விசாரணை நடத்த மேற்படி ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

இந்த விசாரணையில், ஷானி அபேசேகர சார்பில், முன்னர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றிய ஜனாதிபதி சட்டத்தரணி தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்க ஆஜராகிறார். (அ)

# 40 பாகை செல்சியஸை விட அதிகரிக்கும் வெப்பநிலை!

## வெப்பச் சலன மழை குறித்தும் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 31

இலங்கையில் ஏப்ரல் 2 முதல் ஏப்ரல் 15 வரை வெப்பநிலை 40 பாகை செல்சியஸ் இனை விட அதிகமாக இருக்கும் என்பதால் மக்கள் மிக அவதானமாக இருப்பது அவசியம் என யாழ். பல்கலைக் கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவில்-

எதிர்வரும் 02 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை சூரியன் இலங்கைக்கு மேலாக உச்சம் கொடுக்கவுள்ளது.

ஆண்டு தோறும் ஏப்ரல் மாதத்தின் முற்பகுதியில் இலங்கையின் பல பகுதிகளுக்கும் சூரியனின் அமைவு கிட்டத்தட்ட 90 பாகையில் அமையும் என்பதனால் இலங்கை முழுவதும் அதிக வெப்பநிலை நிலவும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

எதிர்வரும் 04.04.2026 அன்று சூரியன் பருத்தித்துறைக்கு நேராகவும், 05.04.2026 அன்று சூரியன் எல்பிட்டியவுக்கு நேராகவும், 06.04.2026 அன்று களுத்துறைக்கு நேராகவும், 07.04.2026 அன்று கொழும்புக்கும் களனிக்கும் நேராகவும், 08.04.2026 அன்று மகியங்கனைக்கு நேராகவும் உச்சம் கொடுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக எதிர்வரும் 02.04.2026 முதல் 15.04.2026 வரை இலங்கையின் பல பகுதிகளிலும் அளவிடப்படும் நாளுக்கான சராசரி வெப்பநிலை 38- 42 பாகை செல்சியஸ் ஆக நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பகல் பொழுதில் அளவிடப்படும் நாளின் அதிகூடிய வெப்பநிலை 43 பாகை செல்சியஸை விட அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உண்மையான வெப்பநிலை இவ்வாறிருக்க உணரக்கூடிய வெப்பநிலை 48 பாகை செல்சியஸை விட அதிகமாக இருக்கும்.

பொதுவாக மனித உடல் 40 பாகை செல்சியஸை விட அதிக வெப்பநிலையை தாங்காது. இது பலருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வெப்பநிலையாகும்.

40 பாகை செல்சியஸ் என்பது வெப்ப வாதத்தை ஏற்படுத்தும் வெப்பநிலையாகும். ஆனால் எதிர்வரும் நாட்களில் (02.04.2026 முதல் 15.04.2026) வெப்பநிலை 40 பாகை செல்சியஸை விட அதிகமாக இருக்கும் என்பதால் மக்கள் மிக அவதானமாக இருப்பது அவசியம்.

குறிப்பாக இந்த அதிக வெப்பநிலை வெப்ப உணர்திறன் உள்ளவர்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்தக்கூடும். குறிப்பாக முதியவர்கள், சிறுவர்கள் மற்றும் விசேட தேவையுடையவர்களும் அதிக நீரிழப்பு உள்ளவர்களும் இந்த அதிக வெப்பநிலையினால் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது.

எனவே எதிர்வரும் 02.04.2026 முதல் 15.04.2026 வரை முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை இயலுமானவரை அதிக வெப்பநிலையினை உணரக் கூடிய நடமாட்டத்தினை தவிர்ப்பது சிறந்தது. குறிப்பாக இக்காலப்பகுதியில் சிறுவர்கள் மற்றும் குழந்தைகளை வெளியில் கொண்டு செல்வதை தவிர்ப்பது சிறந்தது.

எதிர்பார்க்கப்படும் அதிக வெப்பநிலை வெப்பச் சலன நிகழ்வை உருவாக்கும் என்பதனால் எதிர்வரும் 03 ஆம் திகதி முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு முழுவதும் சில இடங்களில் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது-என்றார். (அ)

## கெஹலியவின் மருந்து மோசடிகள் தடயவியல் கணக்காய்வு ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 31

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த காலப்பகுதியில், சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட மருந்து மற்றும் மருத்துவ விநியோகக் கொள்வனவுகளின் கொள்முதல் நடவடிக்கைகள் குறித்து அரசாங்க கணக்காய்வாளர் நாயகத்தினால் தடயவியல் கணக்காய்வு ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக சட்டமா அதிபர் நேற்று திங்கள்கிழமை உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் சிறீலங்கா அமைப்பினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று ஹவிசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டபோதே, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இந்த அறி விப்பை விடுத்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.